பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை 19.08.2025 கதிர் 283

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்றைய கதவடைப்புப் போராட்டம் வெற்றியா தோல்வியா? இதுதான் தமிழ் அரசுக் கட்சி எதிர்ப்பாளர்களிடம் நேற்றுக் காலையிலிருந்து பரபரத்துக் ☞2

## பயணிகளை வழியனுப்ப வருவோருக்கு கட்டுநாயக்காவில் இனிமேல் கட்டுப்பாடு

கட்டுநாயக்க – பண்டாரநாயக்க விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்துக்குள் பயணிகளுடன் வருபவர்கள் பிரவேசிப்பதனை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வாரத்தில் வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாட்களில் இரவு ☞2

# மாகாண சபைகள் ஆளுநர்களின் கீழ் இயங்குவது ஜனநாயக விரோதம்

## பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் கண்டனம்

அரசுத் தலைவரின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் மாகாண சபைகள் இயங்குவது சட்டவிரோதமானதுடன், ஜனநாயகத்துக்கும் விரோதமானது.மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும்,.இந்நாள் அரசுத் தலைவர் அநுரகுமார பொறுப்புக்கூற வேண்டும்.மாகாண சபைத் தேர்தலை நடத்த ஆளும்தரப்பு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் பற்றி அமைச்சர் பிமல் ரத்நாயக்க பாதாள குழுக்களின் எழுச்சிக்கு கடந்த ஆளும்தரப்புங்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ள கருத்து அவதானத்துக்குரியது. முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் தான் பாதாள குழு தலைவர்கள் நாட்டை விட்டு ஓடி தலைமறைவானார்கள். பாதாள குழுக்களுக்கு எதிராக ☞3

## அத்துரலியே ரதன தேரரை கைது செய்யப் பிடியாணை

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய அதுரலியே ரதன தேரரை கைது செய்ய நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

பொலிஸாரினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமர்ப்பணங்களை கருத்தில் கொண்டு இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் வுட்லர் தெரிவித்தார்.

அதன்படி, கொழும்பு நீதவான் நீதிமன்றம் அதுரலியே ரதன தேரரை கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## பிரிவினைவாத தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தவே மாகாணத் தேர்தல்

### விமல் வீரவன்சவின் விளக்கம் இது

பிரிவினைவாதக் கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது. இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத் தேர்தலுக்கான அறிவிப்பை ஆளும்தரப்பு விடுக்கும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ☞3

### கதவடைப்பு ஒரு அடையாளமே

# இராணுவத்தை அகற்றக் கோரி போராட்டங்கள் இனி தொடரும்

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

இந்த ஹர்த்தால் ஒரு அடையாள போராட்டமே. இனிவரும் காலங்களில் இராணுவ முகாம்களை அகற்ற கோரி போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம். என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் சுமந்திரன் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் அளவுக்கதிகமாக உள்ள இராணுவத்தினரை அகற்றக் கோரி நேற்று இடம்பெற்ற ஹர்த்தால் போராட்டத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களை இருவரும் சந்தித்துப் போராட்டத்திற்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தனர். அங்கு சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு கிழக்கில் உள்ள இராணுவத்தினரை அகற்றுமாறு கோரிக்கையை முன்வைத்து ஹர்த்தாலுக்கு தமிழரசு கட்சி அழைப்பு விடுத்தது.

அதனை ஏற்று வடக்கு கிழக்கில் பெரும்பாலான இடங்களில் ஹர்த்தலுக்கு ஆதரவு கிடைத்திருந்தது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக யாழ், நகர் பகுதியில் மாத்திரமே வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. மற்றக் கட்சிகளின் ஆதரவாளர்கள் கடைகளைத் திறந்திருந்தனர் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அவர்கள் ஆதரவு வழங்காதது மன வருத்தமே.

வடக்கு கிழக்கு முழுவதும் மக்களை ஒன்றிணைந்து போராட்டம் ☞2

## பட்டதாரிகள் கைவிடப்பட்டுவிட்டனர் அவர்களின் எதிர்பார்ப்புகள் பொய்த்தன

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

20,000 பேரை ஆசிரியர் தொழிலுக்கும், 3,000 பட்டதாரிகளை ஸ்டெம் (STEM) துறையிலும் மேலும் 9,000 பேரை (STEM) அல்லாத துறைகளிலும் உள்ளீர்ப்புச்செய்வோம் கொள்கை அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலும், இன்று இந்தப் பட்டதாரிகள் கைவிடப்பட்டுள்ளனர். இவர்களின் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் பொய்த்துப்போய்விட்டது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் ☞2

## மத்திய தபால் பரிமாற்றம் நேற்று முதல் ஊழியர்கள் பேராட்டத்தால் ஸ்தம்பிதம்

தபால் மற்றும் தொலை தொடர்பாடல் நிலைய அதிகாரிகள் சங்கமும், ஒன்றிணைந்த தபால் சேவையாளர்கள் சங்கமும் இணைந்துஞாயிற்றுக்கிழமை முதல் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடு;பட்டு வருகின்றன. தபால் திணைக்கள ஊழியர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளபோதிலும், பெரும்பாலான தபால் சேவையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர். இதனால் நேற்றுதிங்கட்கிழமைமத்திய தபால் பரிமாற்றம் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது. தபால் சேவைகள் இடம் பெறாமையால் சேவை பெறுநர்களும் அசௌகரியங்களை எதிர் கொண்டனர்.

அதேநேரத்தில் பேச்சுக்களில் இணக்கம் ☞2

## பிடியாணையை நிறுத்தக் கோரி ராஜித நீதிமன்றில் மனு தாக்கல்

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்படும் விசாரணை தொடர்பாக தம் மீது பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு, கொழும்பு பிரதான நீதிவான் தனுஜா லக்மாலி ஜயதுங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, ☞2

## குற்றச் செயல்கள் தொடர்பில் 5 நாட்களில் 3000 முறைப்பாடுகள்

### நிரம்பி வழிந்த பொலிஸ் வட்ஸ்அப்

நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பில் முறையிடுவதற்காக பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரியவினால் அறிமுகப்படுத்தப்பட்ட வட்ஸ்அப் தொலைபேசி இலக்கத்திற்கு கடந்த ஐந்து நாட்களில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி பிரியந்த வீரசூரிய, ☞2

## உரிய பதில் கிட்டாவிட்டால் அடுத்த கட்ட நடவடிக்கை

### தபால் சேவை தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் உரிய பதில் வழங்கப்படாவிட்டால் அடுத்த கட்ட நகர்வுகளுக்குச் செல்ல வேண்டியேற்படும். அதற்கமைய ஏனைய நிறுவனங்களையும் எமது போராட்டத்தில் இணைத்துக்கொள்வோம். இதனால் ஏற்படும் அசௌகரியகளுக்கும்,நஷ்டத்துக்கும் ஆளும் தரப்பும் அதிகாரிகளுமே பொறுப்புகூற வேண்டும் என ☞2

## இனி இது .....

கிடந்த கேள்வி. சுமந்திரன் எதிர்ப்பார்கள் என்று தம்மை அடையாளம் காட்டிக்கொண்டாலும் தமிழ் அரசுக் கட்சியின் ஜன்ம விரோதிகளான இவர்களின் பயம் எல்லாம் தங்களின் கடும் எதிர்ப்பையும், இழிவுபடுத்தல்களையும், குழப்பங்களையும் தாண்டிப் போராட்டம் வெற்றிபெற்றுவிடுமோ என்கிற அச்சம்தான். அதனால்தான் அவர்களிடம் அவ்வளவு பரபரப்பு. அடிக்கொரு தடவை எல்லா நகரங்களிலும் தமக்குத் தெரிந்தவர்களுக்கு எல்லாம் அழைப்பெடுத்து போராட்டம் எப்படி என்று கேட்டுத் திரிந்தார்கள்.

அவர்களின் கேள்விக்குப் பதில், "எல்லோருக்கும் வெற்றிதான்" என்பதுதான். கதவடைப்பு நடந்ததா என்றால், ''ஆம்'' என்பதுதான் பதில். ஏனெனில் பெரும்பாலான கடைகள் மூடப்பட்டிருந்தன. யாழ். மாவட்டத்தில் திருநெல்வேலி போன்ற நகரப் பகுதிகளில் முழுமையாகச் சந்தை மற்றும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. மற்றைய எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும்கூட கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. வடக்கு கிழக்கு முழுவதும் 8 மாவட்டங்களிலும் இந்த நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் கதவடைப்புப் போராட்டம் தமிழ் அரசுக் கட்சிக்கு வெற்றிதான்.

அதேநேரம், மூடப்பட்டுக் கிடந்த கடைகளுக்கு நடுவே சில கடைகள் திறந்தும் இருந்தன. சில இடங்களில் பல கடைகளும்கூடத் திறந்திருந்தன. குறிப்பாக யாழ். நகரப் பகுதியில் புடவைக் கடை வியாபாரிகளும் நவீன சந்தை வியாபாரிகளும் காலையிலேயே தமது கடைகளைப் பரப்பி வைத்திருந்தனர். அனேகமாக எல்லா சுப்பர் மார்க்கெட்டுக்களுமே திறந்திருந்தன. அப்படிப் பார்த்தால் இந்த கதவடைப்பு வெற்றிபெறக்கூடாது என்று விருப்பிச் செயற்பட்டவர்களுக்கும் வெற்றிதான். ஏனெனில் அனைத்துக் கடைகளும் மூடப்பட்டு முழுமையான கதவடைப்புப் போராட்டம் நடக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் காலத்தில்கூட கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தால் ஒற்றைக் கதவு திறந்து வியாபாரம் செய்யும் அசகாச சூரர்களும் சந்தைக்கு அருகிலிருக்கும் வீதியிலோ ஒழுங்கையிலோ பொருள்களைப் பரப்பி மரக்கறியும் மீனும் விற்கும் பெருமான்களும் இருந்த நிலையில் இப்போது அத்தகைய சுயநலவாத வியாபாரிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது என்பதை இந்தப் போராட்டம் தெளிவாக அடையாளம் காட்டியுள்ளது.

இத்தகையவர்களுக்கு மத்தியிலும் தமிழ் அரசுக் கட்சியின் போராட்டத்தை எப்படியும் குழப்பியே தீரவேண்டும் என்று நின்ற காழ்ப்புணர்வு அரசியல்வாதிகளின் மத்தியிலும் அவர்களால் தூண்டப்பட்ட சமகூக ஊடகப் போராளிகள் மத்தியிலும் எண்ணிக்கையில் பெருமளவான மக்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்து, ஆளும்தரப்பு வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் அளவுக்கதிகமான இராணுவத்தினர் இருப்பதற்கான தமது எதிர்ப்பை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளனர் என்பதே தமிழ் அரசுக் கட்சிக்குக் கிடைத்த வெற்றிதான்.

இருந்தாலும் இந்தப் போராட்டம் இனிமேல் கதவடைப்புப் போராட்டத்திற்கான சாவுமணி என்று ஊடகவியலாளர் ஒருவர் தனது சமூக வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார். அது உண்மையாகத்தான் இருக்கும். இன்று தமிழ் அரசுக் கட்சியின் போராட்டத்தைத் தோற்கடிக்க வேண்டும் என்ற முனைப்பில் செயற்பட்டவர்கள் இனியொருபோது கதவடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுப்பது என்பது தற்கொலைக்கு ஒப்பானது. எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுணம் பிழைத்தால் பரவாயில்லை என்ற ரீதியில் செயற்படும் இத்தகைய அரசியல்வாதிகள் அதிலும் அரசியல் நேர்மையின்றி பின்னால் மறைந்து நின்று இத்தகைய எதிர்ப்புக்களை இயக்குபவர்கள் தமிழ் மக்களின் தலைவர்களாகக்கூடியவர்கள்தானா என்பதைத் தமிழ் மக்கள் தீர்மானிக்கவும் இந்தப் போராட்டம் உதவியிருக்கிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இராணுவத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடாத்த கூடிய கட்சியாக தமிழரசு கட்சியே உள்ளது. அந்த வகையில் நாம் ஹர்த்தலுக்கு அழைப்பு விடுத்தோம். அது வெற்றியை தந்துள்ளது.

எமது ஹர்த்தால் அறிவிப்பு வந்தவுடனையே அரசுத் தலைவர் , அமைச்சர் பிமல் உள்ளிட்டவர்கள் எம்மை தொடர்பு கொண்டு பேசி இருந்தனர். முத்துஐயன்கட்டு இராணுவ முகாமை அங்கிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என கூறினார்கள். இதுவே வெற்றி.

வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து இராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும் அவர்கள் மக்களுடன் மக்களாக இருக்க முடியாது.

தெற்கில் இராணுவ முகாம்கள் உள்ளன. அங்கு அவர்கள் இராணுவ முகாம்களுக்குள் முடங்கி காணப்படுவார்கள். ஆனால் வடக்கு கிழக்கில் அந்த நிலைமை இல்லை. அவர்கள் மக்களோடு மக்களாக , மக்களின் இயல்வு வாழ்வில் தலையீடு செய்கின்றனர்.

பாடசாலைகள் , தனியார் காணிகள் , ஏன் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றுக்கு சொந்தமான காணியை கூட கையகப்படுத்தி அதில் நிலைகொண்டுள்ளனர். அதனால் அவர்கள் இங்கிருந்து வெளியேற வேண்டும்.

இந்த ஹர்த்தால் ஒரு அடையாள போராட்டமே. இனிவரும் காலங்களில் இராணுவ முகாம்களை அகற்ற கோரி போராட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்.

வடக்கு - கிழக்கில் உள்ள பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் தமிழரசு கட்சியின் கட்டுப்பாட்டிலையே உள்ளன. அதனால் , அந்த அந்த பிரதேசங்களில் மக்களை ஒன்றிணைந்து , அந்த பிரதேசங்களில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற கோரி போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளோம்.

பருத்தித்துறை நீதிமன்றுக்கு சொந்தமான காணியில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்ற கோரி, பருத்தித்துறை நகர சபை நகர பிதாவின் அழைப்பில் போராட்டம் நடைபெறவுள்ளது.

அவர் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை சேர்ந்தவர் என்றாலும் அந்த போராட்டத்திற்கு தமிழரசு கட்சி பூரண ஆதரவை வழங்கும். வடக்கு கிழக்கில் இராணுவ மயமாக்கலுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்றார்.

அதேவேளை குறித்த ஊடக சந்திப்பில் .சி.வி.கே. சிவஞானம் கருத்து தெரிவிக்கையில்,

முத்துஐயன்கட்டு இளைஞன் கொலை யானதும், இளைஞன் தொடர்பாகவும் சில விமர்சனங்கள் உள்ளன அவை எமக்கும் தெரியும். ஆனால் இதனை இராணுவ மயமாக்கலுக்கு எதிரான சுட்டியாக கொண்டே நாம் ஹர்த்தலுக்கு அழைப்பு விடுத்தோம்.

இங்கு நோக்கம் இராணுவ மயமாக்கலை எதிர்ப்பது. எனவே நோக்கம் சரியாக இருப்பின் ஹர்த்தலுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அதற்கு யார் அழைப்பு விடுத்தார்கள். யார் செய்கிறார்கள் என ஆராயாமல் ஆதரவு வழங்க வேண்டும்.

இங்கே ஒற்றுமை ஒற்றுமை என கூறி திரிபவர்கள் இந்த விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். நாம் நோக்கம் சரியாக இருந்தால் அதற்காக ஆதரவு கொடுப்பவர்கள்.

அவ்வாறு ஆதரவு கொடுத்து சென்றாலும் எங்களை துரத்துவதில் குறியாகவே உள்ளனர். அது தெரிந்தும் நோக்கம் சரியாக உள்ள போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்துள்ளோம். போராட்டங்களிலும் கலந்து கொண்டுள்ளோம் என்றார்.

## குற்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

071-8598888 என்ற வட்ஸ்அப் தொலைபேசி இலக்கம் ஊடாக நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் முறையிட முடியும் என ஆகஸ்ட் 13 ஆம் திகதி பொதுமக்களுக்கு அறிவித்திருந்தார்.

அதன்படி, ஆகஸ்ட் 13 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் குறித்த வட்ஸ்அப் தொலைபேசி இலக்கத்திற்கு 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## மத்திய தபால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கி வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது நியாயமற்றது என தபால்மா அதிபர் ருவான் சத்குமார தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரமும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன. ஆனால் இணக்கப்பாடுகளை மீறியே தற்போது வேலை நிறுத்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. எனவே வேலை நிறுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு வருமாறு தொழிற்சங்கங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம். பேச்சுவார்த்தைகள் மூலம் இதனை நிறைவுக்கு கொண்டு வர தொழிற்சங்கங்கள் விரும்பினால் அதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம்.

தபால்திணைக்களத்துக்குகிடைக்கப்பெறும் வருமானத்தை விட சம்பளம் மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவுகளுக்கான செலவுகள் அதிகமாகவுள்ளன. தற்போது 4 பில்லியனாகக் காணப்படும் நஷ்டம், சம்பள அதிகரிப்புடன் 10 - 12 பில்லியன் வரை அதிகரிக்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது. வேலை நிறுத்தங்களால் ஒரு நாள் மாத்திரம் இழப்புக்கள் ஏற்படப் போவதில்லை. அதன் விளைவுகள் நீண்ட காலத்துக்கு தொடரும். எனவே அவற்றை சரி செய்வது கடினமாகும்.

தபால் சேவை என்பது போட்;டித்தன்மை மிக்கதாகும். தனியார் துறையினரும் இந்த சேவையில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறிருக்கையில் இவ்வாறு அடிக்கடி வேலை நிறுத்த போராட்டங்களில் ஈடுபட்டால், எமக்கான வாய்ப்புக்கள் இயல்பாகவே தனியார் துறையை நோக்கி நகரக் கூடும். இயலாத பட்சத்திலேயே வேலை நிறுத்தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். முன்வைக்கப்பட்டுள்ள 19 கோரிக்கைகளில் 17 கோரிக்கைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆளும்தரப்புத்தின் கொள்கைகளுக்கு எம்மால் சவால்

## பிடியாணையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாட்டாளரான இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, மனு தொடர்பாக ஆஜராகும்போது இந்த கோரிக்கையை விடுக்குமாறு நீதவான் தெரிவித்துள்ளார்.

அதன்படி, குறித்த மனுவில் கோரப்பட்ட விடயங்கள் தொடர்பாக நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை.

## உரிய பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிணைந்த தபால் சேவை ஊழியர் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வேலை நிறுத்த போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கொழும்பிலிருந்து எந்தவொரு மாகாணத்துக்கும், ஏனைய மாகாணங்களிலிருந்து கொழும்பிற்கும் தபால் பரிமாற்றம் இடம்பெறவில்லை. வேலைநிறுத்தில் ஈடுபடுவோருக்கு அழுத்தம் பிரயோகிப்பதோ, அச்சுறுத்தல் விடுப்பதோ பொறுத்தமற்றது. பிரச்சினைகளுக்கான தீர்வினைக் கோரியே நாம் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம்.

பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். அதற்கு எமக்கு வாய்ப்பளிக்குமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றோம். 18 000க்கும் மேற்பட்ட தபால் சேவையாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். எமது 19 கோரிக்கைகள் தொடர்பில் 15 நாட்களுக்கு முன்னதாகவே தபால்மா அதிபருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருக்கின்றோம். அந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததன் காரணமாகவே வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்தோம்.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படும் வரை வேலை நிறுத்தம் தொடரும். கைரேகைப் பதிவு மற்றும் மேலதிக வேலை நேர கொடுப்பனவு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காகவே எம்மால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டிருக்கின்றார். இது உண்மைக்கு புறம்பான கருத்தாகும். மனித வளம், அடிப்படை வசதிகள், அபிவிருத்திக்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படாமை உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகளின் அடிப்படையிலேயே நாம் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம்.

எனவே எமது போராட்டம் தொடர்பில் உரிய பதில் வழங்கப்படாவிட்டால் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு செல்ல வேண்டியேற்படும். அதற்கமைய ஏனைய நிறுவனங்களையும் எமது போராட்டத்தில் இணைத்துக் கொள்வோம். எமது போராட்டால் பொது மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருக்கக் கூடும். அதற்கு கவலையை தெரிவித்துக் கொள்கின்றோம். இதற்கு ஆளும்தரப்புமும், தபால்துறை உயர் அதிகாரிகளுமே பொறுப்பு கூற வேண்டும் என்றார்.

## பட்டதாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் முன்னெடுக்கப்பட்டு வரும் Citizens' Voice வேலைத்திட்டத்தின் கீழ் வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்துக்கு சமூகமளித்து தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பிலான விடயங்களை கேட்டறிந்த போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது, கிட்டத்தட்ட 40,000 பட்டதாரிகள் வேலையில்லாமல் காணப்படுகின்றனர். தற்போதைய அரசுத் தலைவர் தலைமையிலான ஆளும்தரப்புத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள், கடந்த தேர்தல் காலத்தில் பட்டதாரிகளுக்கு தொழில் பெற்றுத் தருவோம் என வாக்குறுதியளித்தனர். ''வளமான நாடு அழகான வாழ்க்கை' என்ற கொள்கை அறிக்கையின் 72 ஆவது பக்கத்தில், வேலையில்லாப் பட்டதாரிகளை எவ்வாறு தொழிலுக்கு உள்ளீர்ப்போம் என்ற விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் சமயங்களில் வழங்கிய வாக்குறுதிகளும், ஏமாற்றும் கதைகளும் இன்று சமூக ஊடகங்களில் பரவி காணப்படுகின்றன. தாம் பதவிகளுக்கு வந்த பிற்பாடு தொழில்களை நிச்சயம் பெற்றுத் தருவோம் என ஆளும் தரப்பு அமைச்சர்கள் தேர்தல் சமயங்களில் வேலையில்லா பட்டதாரிகள் மத்தியில் பல வாக்குறுதிகளை வழங்கினர்.

தமது முதலாவது வரவு செலவுத் திட்டத்திலயே தொழில்களைப் பெற்றுத் தருவோம் என வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். தேர்தல் காலத்தில் இந்த ஆளும்தரப்புத்திற்கு ஆதரவைப் பெற்றுத் தர வேலையற்ற பட்டதாரிகளை ஒருங்கிணைக்கும் பணிகளை முன்னெடுத்த நபருக்கு இன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பணிப்பாளர் பதவியைப் பெற்றுக் கொடுத்து விட்டு, ஏனைய பட்டதாரிகளை கைவிட்டுள்ளனர்.

வேலையில்லாப் பட்டதாரிகள் தமது தொழில் உரிமைக்காகப் போராடும்போது, பல்வேறு தரப்பினர் அவர்களைக் கேலி செய்து வருகின்றனர். இவர்களை பெறுமானம் அற்றவர்களாக கருதுகின்றனர். இத்தரப்பினர் இலவசக் கல்வி முறையின் மூலம் பட்டம் பெற்றவர்கள். ஆகவே அவர்களை அவ்வாறு கருத வேண்டாம். அவர்களினது தகுதிகளை குறைமதிப்புக்குட்படுத்த வேண்டாம்.

இலவசக் கல்வியின் மூலம் பட்டம் பெற்ற பிள்ளைகளை பெறுமானம் அற்றவர்கள் என்று குறிப்பிடுவது வெட்கக்கேடானதும், அவமரியாதைக்குரிய செயலாகும் என்றார்.

இளங்கலைப் பட்டத்தை அடிப்படைத் தகுதியாகக் கொண்ட சுமார் 50,000 வெற்றிடங்கள் காணப்படுகின்றன என பிரதமர் ஹரிணி அமரசூரிய அமைச்சரவைக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளார்.

50,000 வெற்றிடங்கள் காணப்படுவதாக இருந்தால், இந்த 40,000 பட்டதாரிகளை ஏன் ஆட்சேர்ப்பு செய்யப்படாதிருக்கின்றனர் என்பதில் பிரச்சினை எழுகிறது.

பொறுப்புள்ள முற்போக்கான மக்கள் சார் எதிர்க்கட்சியாக, ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் இந்த வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படும் வரை ஜனநாயக ரீதியிலான போராட்டத்தில் ஈடுபடும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

## பயணிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 மணிமுதல் நள்ளிரவு வரையான காலப்பகுதியினுள், பயணிகளுடன் வருபவர்கள் விமான நிலையத்தின் புறப்பாடு முனையத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில், வேலைபளுமிக்க நேரங்களில், பயணிகளுக்கு தாமதமின்றி சேவையை வழங்குவதற்கும், சனநெரிசலை முகாமை செய்வதற்கும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான நிலையம் மற்றும் விமான நிலையத்தை பயன்படுத்துபவர்களின் வசதி கருதி இந்த நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என விமான நிலைய மற்றும் விமான சேவை நிறுவனம் கோரியுள்ளது.

## பிரிவினைவாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் பணியிடத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் மின்சாரத்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டத்தை தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத்தில் கடுமையாக எதிர்த்தது.மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கவாதியான கடுவலை மாநகர சபையின் தற்போதைய மேயர் ரஞ்சன் ஜயலால் சட்டவரைபை தீ வைத்து கொளுத்தினார்.

காஞ்சன விஜேசேகர கொண்டு வந்த சட்டத்தில் போலியான திருத்தங்களை செய்து அண்மையில் இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. அன்று எதிர்ப்பு தெரிவித்தவர்கள் இன்று முழுமையானஆதரவளித்துள்ளார்கள்.பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இவ்விடயம் தொடர்பில் ஏதும் பேசுவதில்லை.

அண்மையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை மின்சாரசபை (திருத்தச்) சட்டத்தினால் இலங்கையின் மின்சாரம் மற்றும் வலுசக்தித்துறைக்கு பாரிய பாதிப்பு ஏற்படும். வலுசக்தி துறையின் சுயாதீனத்தை பிற நாடுகளுக்கு விட்டுக்கொடுத்து நாட்டின் இறையாண்மையை ஆளும்தரப்பு கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

பிரிவினைவாத கொள்கை கொண்ட புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை திருப்திப்படுத்தும் வகையில் ஆளும்தரப்பு செயற்படுகிறது. இவர்களை மகிழ்விப்பதற்காக எதிர்வரும் ஆண்டு முதல் காலப்பகுதியில் மாகாண சபைத்தேர்தலுக்கான அறிவிப்பை ஆளும்தரப்பு விடுக்கும்.

மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டால் நாட்டில் தேவையில்லா பிரச்சினைகள் ஏற்படும். அண்மையில் நிறைவேற்றப்பட்ட மின்சார திருத்தச் சட்டத்தால் வலுசக்தி துறையின் தனியுரிமை கூறாக்கப்படும் என்றார்.

## மாகாண சபைகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடுமையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

பாதாள குழுக்களுக்கு எதிராக கடுமையான தீர்மானங்களை கடந்த ஆளும்தரப்புங்கள் எடுக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி அதற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு பாதாள குழுக்களை பாதுகாத்தது.அதன் விளைவை இன்று நாடு எதிர்கொள்கிறது.

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் நாளுக்கு நாள் தீவிரமடைந்துள்ளன. பொலிஸாரின் முன்பாக துப்பாக்கி தாரிகள் தமது இலக்கினை நிறைவேற்றிக்கொள்கிறார்கள்.பொதுமக்களின் பாதுகாப்பு அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆளும்தரப்புங்களை விமர்சித்துக் கொண்டிருக்காமல் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாதாளக்குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை ஆளும்தரப்பு எடுக்க வேண்டும்.

இலங்கையின் அரசநிர்வாக கட்டமைப்பில் நாடாளுமன்றம்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் பிரதானவையாக காணப்படுகிறது.மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இதற்கு நல்லாட்சி ஆளும்தரப்பு பொறுப்புக்கூற வேண்டும்.

மாகாணசபைத் தேர்தல்முறைமையை முன்னாள்அரசுத்தலைவர்ரணில்விக்கிரமசிங்க நெருக்கடிக்குள்ளாக்கினார். இதற்கு தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்.மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழல் காணப்படுகிறது. அரசுத் தலைவரின் நேரடி பிரதிநிதியான ஆளுநர்களின் நிர்வாகத்தின்கீழ் மாகாணசபைகள் இயங்குவது சட்டவிரோதமானதுடன்,ஜனநாயகத்துக்கும் விரோதமானது ஆகவே தேர்தலை நடத்த ஆளும்தரப்பு உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தாமதிக்கும் திருத்தங்கள் அதிகரிக்கும் அபாயங்கள்

இலங்கை என்ற சிறிய தீவு, ஆட்சியியல் முரண்பாடுகளால் நிறைந்திருக்கிறது. அதன் தெளிவான எடுத்துக்காட்டு துப்பாக்கி சட்டங்களே ஆகும். உலகில் மிகக் கடுமையான சட்டங்கள் உள்ள நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் இலங்கையில், ஒரு குடிமகன் சட்டரீதியாக துப்பாக்கி வைத்திருப்பதற்கு கடினமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய கட்டாயம் உண்டு. அரசியலமைப்பில் *"arms to bear"* என்ற உரிமையே இல்லை. அந்த வகையில், துப்பாக்கி உரிமம் பெறுவதற்கான கடிதப்பணிகள், சான்றிதழ்கள், மற்றும் அரசுப் பிரமுகர்களின் சிக்கலான அலுவல் சுழற்சிகள் ஆகியவை பொதுமக்களை சோர்வடையச் செய்கின்றன.

ஆனால், வேறு பக்கம், சட்டவிரோத ஆயுதங்கள் தினமும் தெருக்களில் சுழல்கின்றன. குற்றவாளிகள் துப்பாக்கிகளை அச்சுறுத்தலுக்கும், காயப்படுத்தலுக்கும், கொலையிற்கும் பயன்படுத்துகின்றனர். காவல்துறையினர் எவ்வளவு முயற்சி செய்தாலும், துப்பாக்கி குற்றங்கள் தொடர்ந்துகொண்டே வருகின்றன. தினந்தோறும் உயிரிழப்புகள் நிகழ்கின்றன. இவை அனைத்தும், நாட்டின் தற்போதைய துப்பாக்கிச் சட்டங்களும் அவற்றின் அமலாக்க முறைகளும் தோல்வியடைந்துவிட்டன என்பதற்கு உயிரோடும் சாட்சிகளாக உள்ளன.

2018/19 முதல் இன்று வரை நான்கு அரசுகள் துப்பாக்கிச் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்வதாகக் கூறியுள்ளன. ஆனால், உறுதியான செயல் எதுவும் நடைபெறவில்லை. 2019ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பாதுகாப்பு அமைச்சே துப்பாக்கி உரிமங்கள் தொடர்பான மையப்படுத்தப்பட்ட தரவுத்தளமே இல்லையென ஒப்புக்கொண்டது. உரிமம் பெற்ற துப்பாக்கிகள் எத்தனை, எவரிடம் உள்ளன என்பது பற்றிய முழு தகவல்களே அந்த அமைச்சிடம் இல்லை என்பதும் அதிர்ச்சியூட்டியது.

அந்த வருடமே வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்கள் படி, நாட்டில் மொத்தம் 21,247 உரிமம்பெற்றதுப்பாக்கிகள் இருந்தன. அதில் பெரும்பகுதி வேளாண்மை அல்லது பூச்சி கட்டுப்பாடு நோக்கங்களுக்காக வழங்கப்பட்டவை. ஆனால், அவற்றின் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் மிகவும் பலவீனமாகவே இருந்தது. இந்நிலையில், திருத்தப்பட்ட சட்ட முன்மூலம் இன்னும் சட்டமன்றத்தில் வராதிருப்பது அரசின் அலட்சியத்தைக் காட்டுகிறது.

குற்ற உலகத்தோடு மட்டும் இல்லாமல், வனவிலங்குகளும் சட்டவிரோத துப்பாக்கி பயன்பாட்டால் பாதிக்கப்படுகின்றன. சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் அரசுத் துறைகளும் வனவிலங்குகளின் மீது அதிகரித்து வரும் துப்பாக்கி காயங்கள் குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக, நிலக்கிழங்கு மற்றும் வேளாண் பயிர்களைப் பாதுகாக்கும் பெயரில் பயன்படுத்தப்படும் *'trap-guns'* வனவிலங்குகளை கொல்லும் வலையில் மாட்டிக்கொள்கின்றன. மேலும், காற்று–துப்பாக்கிகள் (ழிஷ்ஷ–ஷஷ்சூஷீயிளவி) சிறிய பாலூட்டிகளின் உயிரை பறிக்கும் அளவுக்கு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

இதுவே ஆளும்தரப்பின் முரண்பாட்டைக் காட்டுகிறது. ஒரு பக்கம், துப்பாக்கி பயன்பாட்டை கட்டுப்படுத்துவதாகச் சொல்கிறது. மற்றொரு பக்கம், விவசாயிகளுக்கு *'air-rifles'* வழங்குவதை ஊக்குவிக்கிறது. இதுபோன்ற 'அரைமுறைத் தீர்வுகள்' நீண்ட கால பிரச்சினைகளுக்கு வழிவகுக்கின்றன.

2023ஆம் ஆண்டில் 120 துப்பாக்கி தொடர்பான வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டன. 2024இல் 102 சம்பவங்கள். 2025ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மட்டும் 42 சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அதில் பெரும்பகுதி அமைப்புசார் குற்ற உலகத்துடன் தொடர்புடையவை. இந்த எண்ணிக்கைகள் சற்று மாறுபட்டாலும், சட்டவிரோத ஆயுதப் பயன்பாடு தொடர்ந்து உயர்ந்த மட்டத்தில் நிலைத்திருப்பது தெளிவாகிறது.

கடந்த வாரமே அரசு துப்பாக்கி உரிமம் மறுபதிவு செய்வதற்கான புதிய முறையை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டதாக அறிவித்தது. ஆனால், அந்த முறையின் விவரங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. நான்கு அரசுகள் இந்தப் பிரச்சினையை நீண்ட காலமாக "உறங்கவிட்டிருக்கின்றன". இப்போது நேரம் மிகத் தாழ்ந்துவிட்டது. உடனடியாக செயல் திட்டங்கள் தேவை.

முதலில், மையப்படுத்தப்பட்ட, நெட்வொர்க் செய்யப்பட்ட துப்பாக்கி தரவுத்தளம் உருவாக்கப்பட வேண்டும். காவல்துறையினரும் எல்லைப் பாதுகாப்பு அமைப்புகளும் உடனடி அணுகலுடன் இருக்க வேண்டும். உரிமம் பெற்ற துப்பாக்கிகள் எங்கு இருக்கின்றன, யாரிடம் உள்ளன என்பது தெளிவாக இருக்க வேண்டியது அவசியம்.

இரண்டாவது, சட்டவிரோத ஆயுதங்களைப் பிடிக்க அதிகப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆயுதங்களை ஒப்படைக்கத் தூண்டும் *'gun–buy–back'* திட்டங்கள், மன்னிப்பு காலம் (*amnesty programmes*) போன்றவை கொண்டு வரப்படலாம்.

மூன்றாவது, அரசின் ஆயுதக் கிடங்குகள், குண்டு–வைத்திருப்பு நிலையங்கள் ஆகியவற்றில் ஒழுங்குமுறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அங்கிருந்து ஆயுதங்கள் குற்ற உலகத்துக்குச் செல்லும் வழிகளைத் தடுக்க வேண்டும்.

நான்காவது, பொதுமக்களுக்கு அறிவு ஏற்படுத்தும் திட்டங்கள் அவசியம். சட்டப்படி துப்பாக்கி வைத்திருப்பவர்கள் கூட, உரிமம் புதுப்பித்தல், பாதுகாப்பான சேமிப்பு, பயன்பாட்டு விதிகள் ஆகியவற்றை கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.

இலங்கையின் துப்பாக்கிச் சட்டங்கள் காலத்துக்கு பிந்தியவை. அதேசமயம், குற்ற உலகம் ஆயுதங்களை எளிதில் பெற்றுக்கொள்கிறது. இதனால் தினசரி வன்முறை சம்பவங்கள், உயிரிழப்புகள், வனவிலங்கு அழிவுகள் அனைத்தும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

நான்கு அரசுகள் தாமதித்த இந்தப் பிரச்சினை மேலும் காலம் இழக்கக் கூடாது. இப்போது செயல் வேண்டும், உடனடி சீர்திருத்தங்கள் வேண்டும். இல்லையெனில், தீவு நாடான இலங்கை, அதன் மக்கள், அதன் வனவிலங்குகள் அனைத்தும் இந்த சட்டவிரோத ஆயுத கலாச்சாரத்தின் பலியாட்களாகவே தொடரும்.

### கொட்டாஞ்சேனை மாணவி தற்கொலை விவகாரம்:

## பாலியல் தொந்தரவு குறித்து விசாரணைகள் நடக்கின்றன

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் உயரமான கட்டடத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படும் பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான முறைப்பாடு நேற்று கொழும்பு மேலதிக நீதிவான் பசன் அமரசேன அவர்கள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையை மேற்கொண்டுவரும் சிறுவர்கள் மற்றும் மகளிர் பணியகத்தின் கொழும்பு வடக்கு பிரிவின் பொறுப்பதிகாரி, இந்த சம்பவம் தொடர்பாகக் கிடைத்த சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் நடத்தப்படுவதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சிசிடிவி காட்சிகள் மேலதிக ஆய்வுக்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால் விசாரணை அறிக்கைகள் இன்னும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலும், சம்பவம் தொடர்பாக பலரது வாக்குமூலங்களை பதிவு செய்யும் பணி நடைபெற உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான வைத்திய அறிக்கைகளையும் பொலிஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்ததாக அதிகாரப்பூர்வ செய்தியாளர் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட வாதங்களையும் ஆதாரங்களையும் கருத்தில் கொண்டு, நீதவான் இந்த விசாரணைகளின் முன்னேற்ற அறிக்கையை செப்டம்பர் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தரவிட்டார்.

## தவறுகளை சுட்டிக்காட்டுவதில் தவறில்லை ஆனால் தவறான செய்திகளை பரப்பக்கூடாது

### பிரதி அமைச்சர் முனீர் சுட்டிக்காட்டு

தவறுகள் இருக்குமானால் ஊடகங்கள் அதனை சுட்டிக்காட்டுவதில் எந்த தவறும் இல்லை. அதன் மூலம் தவறுகளை திருத்திக்கொள்ள முடியும். மாறாக நிலைமையை அறியாமல் ஒருவரை பற்றி தவறான செய்திகளை பரப்புவது ஒரு சிறந்த ஊடகவியலாளருக்கு பொறுத்தமில்லை என தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கம்பஹா மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த ஊடக கருத்தரங்கு நேற்று முன்தினம் நீர்கொழும்பு போரத்தொட்ட அல் பலாஹ் கல்லூரியில் இடம்பெற்றது. இதில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவிதார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

21ஆம் நூற்றாண்டில் ஊடகம் சமூகத்திலும் நாட்டின் ஆட்சியின் போக்கில் தாக்கத்தை செலுத்துகின்ற முக்கிய துறையாகும். ஒரு சந்தர்ப்பத்தில் மலேசியாவின் முன்னாள் பிரதமர் மஹதீர் மொஹமட் கூறுகையில், 19ஆம் நூற்றாண்டில் கப்பல் வசம் யாரின் கைகளில் இருக்குமோ அவர்கள் நாட்டை ஆள்வார்கள். 20ஆம் நூற்றாண்டில் யார் வான்படையை கையில் வைத்திருக்கிறார்களோ அவர்கள் உலகை ஆள்வார்கள். அதேபோன்று 21ஆம் நூற்றாண்டில் யார்வசம் ஊடகம் இருக்கிறதோ அவர்கள் நாட்டை ஆள்வார்கள் என தெரிவித்திருந்தார். தற்போது அதுவே இடம்பெறுகிறது.

அதனால் சிறந்த ஊடகவியலாளர்களுக்கு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் பாரியதொரு பங்களிப்பை செய்ய முடியும். சமூகம் சார்ந்த பல பிரச்சினைகள் எமது நாட்டில் இருக்கின்றன. அதனை வெளியில் கொண்டுவரும் பாரிய பொறுப்பு ஊடகங் களுக்கே இருக்கின்றன. அதனால் ஊடகவியலாளர்கள் குப்பைகளை தேடக்கூடியவர்களாக இல்லாமல் சத்தியத்தை தேடிச்சென்று அதனை மக்கள் மயமாக்கும் ஊடகவியலாளர்களாக இருக்க வேண்டும். ஒருசில ஊடகங்கள் குப்பைகளை கழறிக்கொண்டு, அதில் இன்பம் கண்டுவருவதை காணக்கூடியதாக இருக்கின்றன. இதனால் அந்த சமூகம் பாதிக்கப்படுகின்றன. போலி செய்திகள் மூலம் சமூகத்தை பிழையான வழிக்கு கொண்டுசெல்லலாம். பிழையான ஊடக செய்திகளால் ஒரு சமூகமாக நாங்கள் எந்தளவு பாதிக்கப்பட்டிருக்கிறோம் என்பது எங்களுக்கு தெரியும்.

அதனால் ஊடகத்துறையில் இருப்பவர்கள் தனிப்பட்ட விடயங்களை மறந்து, நடுநிலையாக இருந்து செயற்படக்கூடியவராக இருந்தால், அவருக்கும் சமூகத்தில் நல்ல மதிப்பு இருக்கும். எங்களின் தவறுகள் இருக்குமானால் ஊடகங்கள் அதனை சுட்டிக்காட்டுவதில் எந்த தவறும் இல்லை. அதன் மூலம் எங்களுக்கு எமது தவறை திருத்திக்கொள்ள முடியும். மாறாக நிலைமையை அறியாமல் ஒருவரை பற்றி தவறான செய்திகளை பரப்புவது ஒரு சிறந்த ஊடகவியலாளருக்கு அலகல்ல. உங்களுக்கு ஒரு செய்தி கிடைத்தால், அது எந்தளவு உண்மை என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என எமது மார்க்கம் சொல்லித்தருகிறது. அதனால் ஊடகவியலாளர்கள் எப்போதும் சமூகத்தை நல்வழிப்படுத்தக்கூடிய விடயங்களை பரப்பவேண்டும தவிர சமூகத்தில் பிளவை, இனங்களுக்கிடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய செய்திகளை பரப்ப மாட்டார்கள்.

எனது அமைச்சான தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊடகங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும். இன ஐக்கியத்தை ஊடகங்கள் மூலமே ஏற்படுத்தலாம். ஒரு நாட்டின் ஆட்சியை சிறப்பாக முன்னெடுத்துச்செல்லவும் ஆட்சியின் பாக்கில் மாற்றத்தை ஏற்படுத்தவும் ஊடங்களுக்கு முடியும். அதனால் ஊடகவியலாளர்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. அதனால் ஊடக கல்வியை கற்கும் மாணவர்கள் அதனை உணர்ந்து, ஊடக தர்மத்தை பேணி செயற்பட பழகிக்கொள்ள வேண்டும் என்றார்.

## இலங்கைக்குத் தொடர்ந்தும் ஆதரவு தர கொரியா தயார்

இலங்கை ஆளும்தரப்புத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தொடர்ந்து ஆதரவை வழங்க கொரிய ஆளும்தரப்பு தயாராக இருப்பதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ வலியுறுத்தியுள்ளார்.

அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்கவிற்கும், இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீயிக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அரசுத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கோரியாவின் பு கொரியாவின் புதிய ஆட்சியின் கீழ் இலங்கை ஆளும்தரப்புத்தின் முன்னுரிமைகளை அடையாளம் கண்டு நெருக்கமாக செயற்பட கொரியா தயாராகவிருப்பதாக இலங்கைக்கான கொரியத் தூதுவர் மியோன் லீ தெரிவித்தார்.

இலங்கை ஆளும்தரப்புத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் தொடர்ந்து ஆதரவை வழங்க கொரிய ஆளும்தரப்பு தயாராக உள்ளது என்றும் தூதுவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்

கோரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் புதிய பிரதிநிதிகள் அரசுத் தலைவரின் செயலாளரை இதன்போது சந்தித்து கலந்துரையாடினர். இலங்கையில் முன்னெடுக்கப்படும் கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் திட்டங்களை விரைவாக முடிப்பது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
January 25
FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
46, Brodie Lane , Jaffna.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில்

# பாதுகாப்பு பிரதி அமைச்சரை மட்டும் பாதுக்க முயற்சிக்கிறது ஆளும்தரப்பு

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றநிலையில்கிழக்குமாகாணத்தின் முன்னாள் கட்டளைத் தளபதியாக பதவி வகித்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவைவை மாத்திரம் பாதுகாக்க ஆளும்தரப்பு முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும். இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில்உள்ளபிவிதுறுஹெலஉறுமயகட்சிப் பணியகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையால் ஆளும்தரப்பு நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. அமைச்சரவை அமைச்சர்களுக்கு கூட்டுப்பொறுப்பு உள்ளதால் அவர்களுக்கு மாத்திரம் தான் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வர வேண்டும் என்று ஆளும் தரப்பின் இளம் உறுப்பினர்கள் குறிப்பிடுவது அவர்களின் புலமையை வெளிப்படுத்துகிறது.ஷ

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் தான் நாடாளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.சம்பிரதாயத்தின் பிரகாரமே நம்பிக்கையில்லாபிரேரணைகொண்டுவரப்படுகிறது. நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எவ்வித வரையறைகளும் கிடையாது.

நாடாளுமன்றத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்,

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஆகியோருக்கும் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.ஆகவே அமைச்சரவை அமைச்சர்களுக்கு மாத்திரம் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படவில்லை என்பதை ஆளுங்கட்சி விளங்கிக்கொள்ள வேண்டும்.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் பிற்போடுவதற்கு ஆளும்தரப்பு முயற்சிக்கிறது.அதற்கு போலியான காரணிகளை குறிப்பிடுகிறது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் சம்பவத்துடன் இராணுவத்தின் ஒருசில அதிகாரிகள் தொடர்புப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். பயங்கரவாதி சஹ்ரான் உட்பட அவரது தரப்பினர் கிழக்கு மாகாணத்தில் அடிப்படைவாத செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.அக்காலப்பகுதியில் கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியாக அருண ஜயசேகர பதவி வகித்தார்.

இராணுவத்தினர் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்திக்கொண்டு கட்டளைத் தளபதியாக பதவி வகித்த அருண ஜயசேகரவை மாத்திரம் பாதுகாக்க ஆளும்தரப்பு முயற்சிப்பது எவ்விதத்தில் நியாயமாகும்.இராணுவத்தின் மீது பற்று இருக்குமாயின் அருண ஜயசேகர பதவி விலக வேண்டும் என்றார்.




## முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்னவின் பிணை நிராகரிப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர உள்ளிட்ட 2 சந்தேகநபர்களின் பிணை கோரிக்கையை நிராகரித்த மஹர நீதிவான் நீதிமன்றம் அவர்களை ஓகஸ்ட் 25 வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது. சந்தேகநபர்கள் மஹர நீதவான் காஞ்சனா நெரஞ்சலா டி சில்வா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

களனியகிரிபத்கொடபுதியநகரதிட்டத்துக்குஅமையகையகப்படுத்தப்பட்ட காணி ஒன்றினை 2010 ஆம் ஆண்டு போலி ஆவணம் தயாரித்து தனியாருக்கு விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மூவருக்கு கம்பஹா மேல் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா களனி பிரதேச சபையின் அப்போதைய தலைவர் ஜயந்த கப்ரால் மற்றும் மோசடி செய்து விற்கப்பட்ட காணியின் தற்போதைய உரிமையாளரான நவீன் வீரகோன் ஆகியோரையே இவ்வாறு பிணையில் செல்ல கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி டப்ளியூ.கே.டி. விஜேரத்ன அனுமதியளித்தார்.

குறித்த மூவர் சார்பிலும் கம்பஹா மேல் நீதிமன்றில் முன் வைக்கப்பட்ட பிணை மனுக்களை விசாரித்தே நீதிபதி டப்ளியூ.கே.டி. விஜேரத்ன இதற்கான உத்தர்வை பிறப்பித்தார்.

எவ்வாறாயினும் இவ் வழக்கில் கைது செய்யப்பட்ட சிங்கப்பூர் சரத் எனப்படும் தொன் சரத் குமார முன்னாள் அமைச்சர் பிரசன்ன ரணவீர ஆகியோர் தொடர்ந்த்தும் விளக்கமரியலிலேயே உள்ளனர்.

இதனைவிட இந்த விவகாரத்தில் கைது செய்ய களனி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் மில்ரோய் பெரேராவை கைது செய்ய தொடர் விசாரணைகள் இடம்பெறுவதாக சி.ஐ.டி.யினர் முன்னர் மஹர நீதிவான் நீதிமன்றுக்கு தெரிவித்திருந்தனர்.

## மன்னார் போராட்டம் தொடர்கிறது

*மன்னாரில் காற்றாலை கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் திங்கட்கிழமை (18) 16 ஆவது நாளாகவும் சுழற்சி முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.*

*மன்னார் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றிணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டத்திற்கு இன்றைய தினம் ஆதரவு வழங்கும் வகையில் செல்வநகர் கிராம மக்கள் குறித்த போராட்டத்தில் இணைந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்து வருகின்றனர்.*

*இன்று காலை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற குறித்த போராட்டமானது மன்னார் நகர சுற்றுவட்ட பகுதியில் இடம் பெற்று வருகிறது. போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.*

*மன்னாரில் புதிதாக முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை மின் கோபுரம் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வு ஆகியவை முழுமையாக நிறுத்தும் வரை தமது போராட்டம் தொடரும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.*

*மேலும் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கும்,அரசுத் தலைவர்க்கும் இடையில் இன்று மாலை இடம் பெறவுள்ள விசேட சந்திப்பின் போது அரசுத் தலைவர் மன்னார் மக்களுக்கு நிரந்தரமான ஒரு தீர்வு வழங்க வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.08.2025இல் வெளியிடப்பெற்றது